# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,

நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590.


**ஆணை நாள்.12.05.2026**

**முன்னிலை**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 9668/B/2023**

திரு. P. உதயகுமார் ... மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர், ... பொது அதிகார அமைப்பு
வட்டாட்சியர் அலுவலகம்,
பூந்தமல்லி வட்டாட்சியர் அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்-600056.

**ஆணை**

இவ்வழக்கின்மீது இவ்வாணையத்தால் (12.05.2026) இன்று நடத்தப்பட்ட நேரடி விசாரணைக்கு மனுதாரர் திரு. P. உதயகுமார் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொது தகவல் அலுவலர், திருமதி.காதர் பர்வின், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், பூவிருந்தவல்லி அவர்கள் ஆஜரானார்.

2. மனுதாரர் 29.05.2023 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)-ன்கீழ் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில், இவ்வழக்கு (12.05.2026) இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்மனுவானது மனுதாரர் 13.03.2023 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தகவல்கள் வழங்கக்கோரி தாக்கல் செய்த மனுவாகும்.

3. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் பொது அதிகார அமைப்பால் போதுமான தகவல்கள் வழங்கப்படவில்லையென தெரிவித்து, அதனை பெற்றுத் தரும்படி ஆணையத்திடம் கேட்டுக்கொண்டார். இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொது தகவல் அலுவலர் மனுதாரருக்கு 25.10.2025, 26.02.2025, 24.08.2023 மற்றும் 08.05.2026 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல் வழங்கியதாக தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை ஆணையத்தின் பார்வைக்குச் சமர்ப்பித்தார்.

4. இன்றைய விசாரணையின் முடிவில் ஆவணங்கள் அடிப்படையில் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல் போதுமான தகவலாகக் கருதி, இந்த மனு முற்றாக்கம் செய்யப்படுகிறது.

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 9668/B/2023</u>**
**பெறுநர்**

1. பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பூந்தமல்லி வட்டாட்சியர் அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்-600056.

2. மேல்முறையீட்டாளர்,
திரு. P. உதயகுமார்,
பழைய எண்.24,
புதிய எண்.53,
நடுத்தெரு,
மயிலாப்பூர்,
சென்னை-600004.
செல்.9445513990.

Copy to: File. GP PC
13,05.26